## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 118/2022**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மெய்யம்மாள் | தொழில் | : கூலி |
| தந்தை பெயர் | : வீரமுத்து | சமயம் | : |
| கிராமம் | : மேல்பாப்பம்பாடி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 60 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1, 2, 3 எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் மேல்பாப்பம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 அர்ஜுனன் எனது மருமகன். அ.சா.2 சங்கீதா என் மகள். ஆஜர் எதிரிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள். 2 ம் எதிரி கஸ்தூரி எனக்கு ஓரக்குத்தி.

2. கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் நானும், என் மகளும் களை வெட்டுவதற்கு பக்கத்து ஊருக்கு சென்றோம். அப்போது வீட்டில் போட்டிருந்த வேலிகளை சின்னக்கண்ணன் பிடுங்கி போட்டு விட்டு கொம்பு நட்டுவிட்டு புடவை கட்டியிருந்தார். மாலை நான் ஏன் புடவை கட்டினாய் என்று சின்னக்கண்ணனிடம் கேட்டபோது கத்திவிட்டு கிழித்து விடுவேன் என்று கூறினார். அப்போது அங்கு என் மருமகனும், மகளும் இல்லை. தெவிடியா ஓடிப்போய்விடு என்று சொன்னார். அப்போது என் மருமகன் அங்கு வந்தார். சின்னக்கண்ணன் பெரிய கட்டையை தூக்கி என் மருமகன் அர்ஜுனனை அடித்து விட்டார். அப்போது என் மகளும் வந்து மடக்கினார். அப்போது ஜல்லிக்கல்லால் என் மகளை லட்சுமி அடித்து விட்டார். அதனால் என் மகளுக்கு முதுகில் ரத்தம் ஒழுகியது. என் மருமகனுக்கு மண்டையில் ரத்தம் ஒழுகியது. செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார்கள். மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். அங்கு 10 நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

3. எங்களுக்கும் சின்னக்கண்ணனுக்கும் வீட்டு மனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அர்ஜுனன் கட்டியுள்ள வீட்டிற்கு ஆவணம் இல்லை என்றால் அது புறம்போக்கு இடம். கஸ்தூரி எனக்கு மைத்துனர் மனைவி. சின்னக்கண்ணு மற்றும் லட்சுமி எனது மைத்துனனின் மகன் மற்றும் மகள். அர்ஜுனன் மருமகன். சங்கீதா மகள். எனது மருமகன் அர்ஜுனனுக்கு குடிப்பழக்கம் உண்டு. எனது மருமகன் குடிபோதையில் இருக்கும்போது மேற்படி வேலியை பிய்த்து எறிந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது மகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. சின்னக்கண்ணன் வீட்டிற்கும் அர்ஜுனன் வீட்டிற்கும் சந்து சுமார் 3 அடி இருக்கும் என்றால் அதிகமாக இருக்கும். நான், சங்கீதா, அர்ஜுனன், ஏழுமலை அனைவரும் சேர்ந்து எதிரிகளை அடித்ததாக எதிரிகள் அனைவரும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எனக்கு தெரியாது. மேற்படி 1வது சாட்சி அர்ஜுனன் மற்றும் எதிரிகளும் ஒன்றாக இருப்பதாக மெய்யம்மாள் எங்களுக்குள் சண்டை வருகிறது என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகளை அடித்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4. என் மருமகன் அர்ஜுனன் நீதிமன்ற விசாரணையில் என்னை யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை என்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி தெரியாமல் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை யாராவது அடித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.